மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 02 ம் நாள் திங்கள்கிழமை
இடைநிலை மனு எண். 06/2025
இன்
இடைநிலை மனு எண். 03/2020
இன்
அசல் வழக்கு எண்.42/2018
-------

ஜானகி .. மனுதாரர்/வாதி

/எதிர் /

1. சாந்தி
2. ரவி
3. அய்யம்மாள்
4. சீனிவாசன் ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 23.02.2026 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. கணபதிராமன், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. D. பாஸ்கரன், அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்ட நிலையிலும், 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். இராஜேஸ், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது இ.ம.எண்.03/2020ல் 02.08.2023ம் தேதியில் தாக்கல் செய்துள்ள அறிக்கையை ரத்துசெய்துவிட்டு மீண்டும் வழக்கு தபசில் சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்யும் வகையில் புதிய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டி கட்டளை 26 விதி 10 உரிமையியல்

நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u>**–

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள் மீது விளம்புகை மற்றும் ஒப்படைப்பு மற்றும் இதர பரிகாரங்கள் கேட்டு தாக்கல் செய்துள்ளார். அதில் தபசில் சொத்திதல் அமைப்பு மற்றும் அதில் அமைந்துள்ளவற்றை குறித்து அளந்து அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய வேண்டி இ.ம.எண்.209/2018 தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டது. ஷை நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிட்டு கடந்த 31.07.2019 ம் தேதியில் அறிக்கை செய்துள்ளார். ஷை அறக்கை துல்லியமான அளவுகளுடன் முழுமையாக தாக்கல் செய்யாத காரணத்தால் அதனை ரத்து செய்து மீண்டும் ஆணையர் நியமனம் செய்து அளக்க வேண்டி இ.ம.எண்.03/2020 தாக்கல் செய்துள்ளார். ஷை மனுவை அனுமதித்து ஆணையர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஷை ஆணையர் சொத்தை பார்வையிட்டு 02.08.2023 ம் தேதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். ஷை அறிக்கை மீது மனுதாரர் 22.08.2023 ம் தேதி ஆட்சேபணைகளை தாக்கல் செய்துள்ளார்.

2.2. வழக்குரை சொத்தானது தென்வடல் 146 அடியும், கிழமேல் வடதலையடி 7.3 அங்குலமாகும். தென்தலையடி 5, அங்குலம் 6 ஆகும். ஆனால் நீதிமன்ற ஆணையர் தனது 02.08.2023 ம் தேதிய அறிக்கையில் தபசில் சொத்தின் தென்வடல் கீழ்தலையடி 120 என்றும் மேல்தலயடி 141 அடி என்றும் தவறுதலாக குறிப்பிட்டுள்ளார். ஸ்தலத்தில் உள்ளபடி தபசில் சொத்தின் அளவுகளை குறிப்பிடவில்லை. ஷை தவறான அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடத்தை பார்த்தால் உண்மை நிலை தெளிவாக தெரியும். அதேபோல் அறிக்கையில் வழக்கு சொத்தின் கிழமேல் வடதலையடி 7–1/4 அடி என்று சரியாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் கிழமேல் தென்தலையடி குறித்து தனது அறிக்கையில் எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் வரைபடத்தில் கிழமேல் தென்தலையடி 4.7 அடி

என்று குறிப்பிட்டுள்ளார். தபசில் சொத்தில் கிழமேல் தென்தலையடி 5.6 அடி ஆகும். தபசில் சொத்தில் தென்கடைசியில் மேல்புறத்தில் சீனிவாசன் என்பவர் புதிதாக வீடு கட்டியுள்ளார்.

2.3. அவர் தபசில் சொத்தில் கிழமேல் 1–1/2 அடி அளவிற்கு ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார். அதனை அறிக்கையில் குறிப்பிடாமல் தவிர்க்க வேண்டும் என்பதற்காகவே தபசில் சொத்தின் கிழமேல் தென் தலையடி குறித்து அறிக்கையில் குறிப்பிடவிலலை. மேலும் ஷை சீனிவாசன் செய்துள்ள ஆக்கிரமிப்புகள் குறித்தும் அறிக்கையில் குறிப்பிட்டு கூறவில்லை. மேலும் 1ம் பிரதிவாதி தபசில் சொத்தை நோக்கி மூன்று வாசல்கள் வைத்து வீடு கட்டியுள்ளார். அந்த வாசல்களை பற்றி அறிக்கையில் குறிப்பிடவில்லை. மேலும் மேற்கண்ட மூன்று வாசல்களில் உள்ள படிக்கட்டுகள் அனைத்தும் தபசில் சொத்தில் அமைந்துள்ளது. மேற்படி படிக்கட்டுகளைப் பற்றியும் அதன் அளவுகள் பற்றியும் அறிக்கையில் குறிப்பிடாமல் ஒரு வாசலுக்குரிய படிக்கட்டுகளை பற்றி மட்டும் குறிப்பிட்டுள்ளார்.

2.4. தபசில் சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து பிரதிவாதி நான்கு கான்கிரீட் சிமெண்ட்தூண்களை கட்டியுள்ளார். இது குறித்து ஆணையர் தனது அறிக்கையில் நான்கு சிறிய தூண்கள் கட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். ஷை தூண்களின் அளவுகள் என்ன என்பது குறித்து வரைபடத்தில் 11–1/4 இன்ச் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், அறிக்கையில் 11–1/4 அடி என குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஷை தூண்களின் கிழமேல் அளவு 11–1/4 இன்ச் ஆகும். தென்வடல் 9 இன்ச் ஆகும். தபசில் சொத்தின் தென்புறத்தில் மேல்புறம் சீனிவாசன் என்பவர் கட்டியுள்ள வீட்டின் மாடிப்படிகள் அனைத்தும் வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது. அதனை ஆணையர் தனது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதன் அளவுகள் பற்றி குறிப்பிடவில்லை. ஆனால் அறிக்கையில் மாடிப்படிகள் பற்றியும், அதன் அளவுகள் பற்றியும் முழுமையாக

குறிப்பிடவில்லை. ஷை சீனிவாசன் அவர்களை வழக்கில் தற்போது 4ம் எதிர்மனுதாரராகவும், அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியாகவும் சேர்க்கப்பட்டுள்ளார். தபசில் சொத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுமானங்கள் அனைத்தும் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியும், 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதியும், வழக்கு சொத்தில் செய்துள்ள ஆக்கிரமிப்புகளாகும்.

2.5. 1 மற்றும் 4 பிரதிவாதிகள் செய்துள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லாமல் மேம்போக்காக அறிக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு தாக்கல் செய்த பின்பு 1 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் கட்டுமானங்களை செய்துள்ளார்கள். ஷை கட்டுமானங்களின் அளவுகள் குறித்து துல்லியமாக அளவுகள் குறித்து நீதிமன்றததின் பார்வைக்கு கொண்டுவர வேண்டியது மிகவும் அவசியமாகும். அவ்வாறு கொண்டுவந்தால் மட்டுமே வழக்குரையில் தேவையான சீர்திருத்தம் செய்து வழக்கு நடத்த இயலும். அவ்வாறு முழு விபரத்தையும் துல்லியமாக கொண்டு வந்தால் மட்டுமே அசல் வழக்கில் சிறந்த முடிடிவ நீதிமன்றத்தால் எடுக்க முடியும். நீதிமன்ற ஆணையர் துல்லியமான அளவுகளுடன் முழுமையான அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்று மனுதாரர் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளார்.

2.6. மேற்படி முழுமையற்ற அறிக்கையின் அடிப்படையில் வழக்கை மேல்நடத்தினால்அசல் வழக்கில் மனுதாரருக்கு பாதகம் ஏற்பட்டுவிடும். மேற்படி முழுமையற்ற அறிக்கையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டால் மனுதாரருக்கு மிகுந்த இழப்பும் கஷ்ட நஷ்டமும் ஏற்பட்டுவிடும். ஆகவே ஷை காரணங்களினால் 02.08.2023ம் தேதியில்நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை ரத்து செய்துவிட்டு மீண்டும் வழக்கு சொத்தை பார்வையிட்டு அளந்து துல்லியமான அளவுகளுடன் அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையருக்கு உத்தரவிட வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த மனு மீது எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித நியாயமான ஆட்சேபணைகளும் இருக்கப்

போவதில்லை. மனுவை அனுமதிக்காதுபோனால் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். எனவே மனு தாக்கல்.

3. **1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 4ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் –**

**3.1.** இதனடியில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர இதர சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவைகள் மற்றும் கற்பனையானவைகள் ஆகும். அவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். தாவா வழக்கானது சிறப்பு பட்டியலில் இரண்டு முறை விசாரணைக்கு ஏற்பட்டும், தாவா வழக்கின் விசாரணையை தாமதப்படுத்த வேண்டுமென்பதற்காக தாவா மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே இரண்டு முறை தாவா சொத்தினை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்யகோரி மனுதாரர்/வாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் பேரில் நீதிமன்ற ஆணையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு தபசில் சொத்துக்கள் வாதி, பிரதிவாதிகள் முன்னிலையில் நீதிமன்ற ஆணையாளரால் அளவீடு செய்யப்பட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2. மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்தின் வடபகுதியினை பொறுத்தமட்டிலும் மனுதாரரின் முன்னோர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் முன்னோர்கள் அவர்களுக்குள்ளே ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தி தாவா சொத்தில் வடபுறத்தின் கிழக்குப்பகுதியிலும், மேற்குப் பகுதியிலும் தலா ஒன்றரை அடியினை அவர்களுக்குள் பாத்தியப்படுத்திக் கொண்டு கட்டிட அமைப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள். அதனைபோலவே தாவா சொத்தில் தென்புறத்தினைப் பொறுத்து 4ம் எதிர்மனுதாரரின் கிரைய முன்னோர்கள் மற்றும் தாவா சொததின் தென்புறத்தில் கீழ்புறமுள்ள உரிமையாளர்களின் முன்னோர்களும் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தி தாவா சொத்தை தென்புறத்தில் மேற்குப்புறமும் கிழக்குப்புறமும் கட்டிட அமைப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

3.3. தற்போது தாவா சொத்தின் தென்புற கிழமேல் அளவானது ஒன்றரை அடி தான் உள்ளது. தாவா சொத்தின் தென்பகுதியைப் பொருத்தளவில் மனுதாரருக்கோ எதிர்மனுதாரர்களுக்கோ எவ்வித அனுபவமோ, பாத்தியமோ கிடையாது. அவர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. தபசில் சொத்துக்களைப் பொறுத்து ஏற்கனவே இரண்டு முறை அளவீடு செய்யப்பட்டு நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டும் மூன்றாவது முறையாக மனுதாரர்/வாதியால் தபசில் சொத்தினை நீதிமன்ற ஆணையாளர் மூலம் அளவீடு செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பது வழக்கினை வேண்டுமென்றே வீண் காலதாமதம் செய்ய வேண்டுமென்றும், வழக்கினை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டவைகளாகும்.

3.4. தாவா வழக்கில் ஏற்கனவே நியமனம் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையாளர் அவரது பணியை செவ்வனே செய்து தபசில் சொத்தினை பார்வையிட்டு துல்லியமாக அளந்தும், அதன் அமைப்புகளையும், தெள்ளத்தெளிவாக குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார். ஆனால் தற்போது வழக்கின் தன்மைக்கு தேவையில்லாத புதிய சங்கதிகளை திரட்டுவதற்காகவும், தாவா வழக்கினை காலதாமதப்படுத்துவதற்காகவும், வழக்கின் தேவையில்லாத கட்சிக்காரர்களை சேர்ப்பதற்காகவும், புதிதாக நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்யக்கோரி தாவா மனுவினை மூன்றாவது முறையாக தாக்கல் செய்துள்ளார். எனவே தாவா மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை இந்நிர் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

## 6. <u>தீர்வு</u>

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. இ.ம.எண்.03/2020 ல் 02.08.2023 ம் தேதியில் தாக்கல் செய்துள்ள அறிக்கையை ரத்து செய்துவிட்டு மீண்டும் வழக்கு தபசில் சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்யும் வகையில் புதிய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவிற்கு மனுதாரர் சொல்லும் காரணம் என்னவென்றால், தபசில் சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து பிரதிவாதி நான்கு கான்கிரீட் சிமெண்ட்தூண்களை கட்டியுள்ளார் என்றும், இது குறித்து ஆணையர் தனது அறிக்கையில் நான்கு சிறிய தூண்கள் கட்டியுள்ளதாக குறிப்பிட்டு, ஷை தூண்களின் அளவுகள் என்ன என்பது குறித்து வரைபடத்தில் 11–1/4 இன்ச் என்று குறிப்பிட்டுள்ளார் என்றும், ஆனால், அறிக்கையில் 11–1/4 அடி என குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஷை தூண்களின் கிழமேல் அளவு 11–1/4 இன்ச் ஆகும். தென்வடல் 9 இன்ச் ஆகும். தபசில் சொத்தின் தென்புறத்தில் மேல்புறம் சீனிவாசன் என்பவர் கட்டியுள்ள வீட்டின் மாடிப்படிகள் அனைத்தும் வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது. அதனை ஆணையர் தனது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதன் அளவுகள் பற்றி குறிப்பிடவில்லை. ஆனால் அறிக்கையில் மாடிப்படிகள் பற்றியும், அதன் அளவுகள் பற்றியும் முழுமையாக குறிப்பிடவில்லை. ஷை சீனிவாசன் அவர்களை வழக்கில் தற்போது 4 ம் எதிர்மனுதாரராகவும், அசல் வழக்கில் 4 ம் பிரதிவாதியாகவும் சேர்க்கப்பட்டுள்ளார். தபசில் சொத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுமானங்கள் அனைத்தும் 1 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதியும், 4 ம் எதிர்மனுதாரர்/4 ம் பிரதிவாதியும், வழக்கு சொத்தில் செய்துள்ள ஆக்கிரமிப்புகளாகும் 1 மற்றும் 4 பிரதிவாதிகள் செய்துள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லாமல் மேம்போக்காக அறிக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு தாக்கல் செய்த பின்பு 1 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் கட்டுமானங்களை செய்துள்ளார்கள்.

வை கட்டுமானங்களின் அளவுகள் குறித்து துல்லியமாக அளவுகள் குறித்து நீதிமன்றத்தின் பார்வைக்கு கொண்டுவர வேண்டியது மிகவும் அவசியமாகும். அவ்வாறு கொண்டுவந்தால் மட்டுமே வழக்குரையில் தேவையான சீர்திருத்தம் செய்து வழக்கு நடத்த இயலும். அவ்வாறு முழு விபரத்தையும் துல்லியமாக கொண்டு வந்தால் மட்டுமே அசல் வழக்கில் சிறந்த முடிடிவ நீதிமன்றத்தால் எடுக்க முடியும். நீதிமன்ற ஆணையர் துல்லியமான அளவுகளுடன் முழுமையான அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்று மனுதாரர் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளார். மேற்படி முழுமையற்ற அறிக்கையின் அடிப்படையில் வழக்கை மேல்நடத்தினால்அசல் வழக்கில் மனுதாரருக்கு பாதகம் ஏற்பட்டுவிடும். மேற்படி முழுமையற்ற அறிக்கையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டால் மனுதாரருக்கு மிகுந்த இழப்பும் கஷ்ட நஷ்டமும் ஏற்பட்டுவிடும்.

**6.2.** எதிர்மனுதாரர் தன்னுடைய ஆட்சேபணையில், தாவா மனுவானது அசல் வழக்கினை வீண் காலதாமதம் செய்ய வேண்டுமென்றும், வழக்கினை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலும், வழககின் தேவையில்லாத கட்சிக்காரர்களை சேர்ப்பதற்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.3.** வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் ஏற்கனவே இரண்டு முறை ஆணையர் நியமனம் செய்யப்பட்டு விரிவான அறிக்கைகள் மற்றும் வரைபடங்கள் தாக்கல் செய்துள்ளதை இந்த நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொள்கிறது. ஆணையர் நியமனம் என்பது சான்றுகளை சேகரிக்கும் கருவி மட்டுமே. இந்நிலையில், வழக்கு சொத்து சரியாக விவரிக்கப்படவில்லை என்ற காரணத்தை மட்டுமே கொண்டு மீண்டும் ஆணையர் நியமனம் கோருவது ஏற்கனவே உள்ள சான்றுகளின் மதிப்பீட்டை தவிர்க்கும் முயற்சியாகும். மேலும் இவ்வழக்கு 2018 ம் ஆண்டு தொடங்கப்பட்டதாகும். 6 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில்

உள்ள இவ்வழக்கில் மீண்டும் ஆணையர் நியமனம் செய்வது வழக்கின் முடிவை தாமதப்படுத்தும். உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் அடிப்படை நோக்கம் வழக்குகளை விரைவாகவும், திறம்படவும் தீர்ப்பதே ஆகும். மேற்கண்ட காரணத்தினால் இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02–ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
I.A. No.06/2025
இன்
I.A. No.03/2020
இன்
O.S.No.42/2018
**உத்தரவு**
நாள்–02.03.2026.